செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 32 நாள் : 20/1/2017

பத்திரிக்கை செய்தி

பொது விநியோகத் திட்டத்தின் செயல்பாட்டிலும், நியாய விலை கடைகளின் செயல்பாட்டிலும் வெளிப்படையான முறை கொண்டு வரும் வகையில் 26.01.2017 குடியரசு தினத்தன்று நடைபெற உள்ள கிராம சபா கூட்டத்தில் நேரடியாக நியாய விலை அங்காடிகளின் கணக்குகளை சமூக தணிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளது. இத்திட்டம் முதற்கட்டமாக கிராமப்புறப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

சமூக தணிக்கையின் போது முந்தைய ஆறு மாத காலத்திற்குரிய கிராமப்புறங்களில் செயல்படும் நியாய விலை அங்காடிகளின் “அ” பதிவேடுகள் வழங்கல் பதிவேடுகள், சிட்டா பதிவேடுகள், இருப்பு பதிவேடுகள், ஆய்வு பதிவேடுகள், பில் புத்தகங்கள் ஆகியவை 26.01.2017 அன்று நடைபெறும் கிராம சபா கூட்டத்தில் சமூக தணிக்கைக்காக பொது மக்கள் முன்பு வைக்கப்படும். எனவே கிராம சபாவில் நடைபெறும் சமூக தணிக்கையில் பங்கு பெறுவதோடு தங்களுக்கான பொது விநியோக திட்ட தொடர்பாக சந்தேகங்களை தீர்த்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன் இ.ஆ.ப.அவர்கள் தெரிவித்துள்ளார்.

ஒம்/- சி.அ.ராமன்
மாவட்ட ஆட்சித் தலைவர்,
வேலூர்.

/உத்தரவுபடி/

மாவட்ட வழங்கல் அலுவலர்,
வேலூர்.

20/1/17
செ.ம.தொ.அ.
வேலூர்– 9.

20/1/17